# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மாகாண மட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை உ 2013
## வரலாறு II

தரம் – 11 நேரம் : 3 மணித்தியாலம்

சுட்டெண் : ............................... புள்ளிகள்

❖ கவனிக்க.
- ♦ பகுதி I இன் 1ம் வினா காட்டாயமானது.
- ♦ பகுதி II இலிருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி III லிருந்து இரு வினாக்களுக்கும் விடைதருக.
- ♦ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடைதருக.

### பகுதி I

**01)**

அ. கீழே (i) இன் கீழ் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இன் கீழ் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i) சேனநாயக்கா சமுத்திரம், களுகங்கை, இரணை மடு, நாகதீப விகாரை, மத்தள, கற்பிட்டி, மகியங்கணை, தம்பதெனியா, தம்புள்ள, விஜித்தகம. (10புள்ளிகள்)

ii) தப்தி நதி, மதராசிப்பட்டணம், அலெக்சாந்திரியா, பாமியன், சுயெஸ் கால்வாய், போரோ புதூர், வடகொரியா, கஸ்பியன் கடல். (8புள்ளிகள்)

ஆ. i) கீழே A, B, C, D ஆகியவற்றின் கீழ்க் காட்டப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடையவர்களை உமது விடைத்தாளில் முறையே எழுதுக.

A. இலங்கையில் சங்கமித்த தேரரின் வழிகாட்டலின் கீழ் மகாஜனம் பௌத்தத்திற்கு அரச அனுசரனை வழங்கியவர்.

B. கேமமாலதந்த இளவரசி இலங்கைக்கு புனித தந்ததாதுவைக் கொண்டு வந்த போது இலங்கையில் மன்னனாக இருந்தவர்.

C. 2ம் உலகமகா யுத்தத்தின் போது ஜப்பானில் அணுகுண்டு வீசுவதற்கு அனுமதியளித்த அமெரிக்க ஜனாதிபதி

D. □பெரஸ் ரொய்கா□, □கிளாஸ் நொஸ்ட்□ ஆகிய முதலாளித்துவக் கொள்கைகளுக்கு ரஷ்யாவில் ஆதரவளித்த அதிபர்.

(4புள்ளிகள்)

ii) இங்கு A, B ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்குரிய விடைகளை உமது விடைத்தாளில் எழுதுக.

1. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஆக்கம் யாது?
2. இது எக்காலத்துக்குரியது?
3. இதனை அமைத்த மன்னனைப் பெயரிடுக.
4. இவ் ஆக்கத்தின் சிறப்பம்சம் ஒன்றைக் குறிப்பிடுக.



படம் A

(4புள்ளிகள்)

iii) 1. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நபரைப் பெயரிடுக.
2. இவர் எவ் அரசப் பரம்பரையைச் சேர்ந்தவர்?
3. இவர் சமயப் பொறையை கடைப்பிடிக்கும் வகையில் நீக்கிய வரி யாது?
4. இவர் அறிமுகப்படுத்திய புதிய சமயப்பிரிவு யாது?




படம் B

(4புள்ளிகள்)

## பகுதி II

**02)** i) அருகில் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் முதல் ஆரியப் புலர்பெயர்ச்சி குழுக்கள் தரை இறங்கிய 3 இடங்கள் A, B, C எனக் காட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பெயரிடுக.

(3புள்ளிகள்)




ii) பின்வரும் A, B, C, D என்ற வினாக்களுக்குரிய விடைகளை கீழே தரப்பட்டுள்ள அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. அநுராதபுர இராசதானியின் இறுதி மன்னன்

B. இலங்கை இளவரசி கடத்தப்பட்டது தொடர்பாக பர்மா மீது படையெடுத்த இலங்கை மன்னன்.

C. கலிங்கமகானின் படையெடுப்பினை எதிர்கொண்ட பொலநறுவை மன்னன்.

D. இலம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னன்.

(4ம் மகிந்தன், 5ம் மகிந்தன், வசபன், நிஸங்கமல்லன், 1ம் பராக்கிரமபாகு, மித்தசேனன், பராக்கிரம பாண்டியன்.)

(4புள்ளிகள்)

iii) இலங்கையில் பௌத்தமதம் பரவியமையால் ஏற்பட்ட செல்வாக்குகள் இரண்டைக் கூறி விளக்குக.

(5புள்ளிகள்)


iv) இலங்கையில் இராசரட்டை காலப்பகுதியில் காணப்பட்ட பொருளாதார முறைமைகள் மூன்றைக் கூறி விளக்குக.

(6புள்ளிகள்)

**03)** **"இலங்கை நாகரீகம் நீர்நிலைகளை மையமாகக் கொண்டு ஆரம்பமாகி வளர்ச்சியடைந்தமையால் அது நீர்வள நாகரீகம் எனப்படுகின்றது"**

i) அருகில் தரப்பட்டுள்ள குளத்தின் படத்தில் காட்டப்பட்டுள்ள A, B, C ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.

(3புள்ளிகள்)



ii) பின்வரும் A, B, C, D என்ற வினாக்களுக்குரிய விடைகளை கீழே தரப்பட்டுள்ள அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. வில் வடிவில் அமைந்த அணையை உடைய குளம்.

B. சம உயரக் கோட்டின் நீளத்திறகேற்ப அமைக்கப்பட்ட அணையை உடைய குளம்.

C. இருந்த கல்லைக் குடைந்து உருவாக்கப்பட்ட கலிங்களை உடைய குளம்.

D. குவாட்சைட் இயல்பைக் கொண்ட நிலத்தில் அமைக்கப்பட்ட குளம்.

(கலாவாவி, மின்னேரியா, செரபொரவாவி, இராட்சதக்குளம், காமினிவாவி, பராக்கிரம சமுத்திரம்)

(4புள்ளிகள்)

iii) பண்டைய நீர்ப்பாசன தொழில்நுட்ப சிறப்புக்களை இரண்டு விடயங்களின் ஊடாக விளக்குக.

(5புள்ளிகள்)

iv) நீர்வள நாகரீகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் மூன்றைக் கூறி விளக்குக.

(6புள்ளிகள்)

**04) □கலிங்கமாகனின் படையெடுப்பின் பின்னர் இலங்கையின் பண்டைய இராச்சியங்களின் தலைநகரங்கள் அவ்வப்போது இடம் மாறியமையால் இலங்கையின் அரசியல், பொருளாதார கோலங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியது.□**

i) கீழே தரப்பட்டுள்ள தென்மேற்கு இராசதானிகளின் பண்டைய காலப் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A - தம்பதெனியா

B - குருணாகல்

C - கம்பளை

(ஶ்ரீ ஜெயவர்த்தனபுர, யம்புதோனி, கங்காசிறிபுர, எதுகல்புரய, சுபபர்வத) (3புள்ளிகள்)

ii) கீழே தரப்பட்டுள்ள சிறப்புப் பெயர்களைக் கொண்ட தென்மேற்கு இராசதானிகளின் மன்னர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A - கலிகால சாகித்திய சர்வஞான பண்டிதர்

B - பண்டித பராக்கிரமபாகு

C - போசத் விஜயபாகு

D - வன்னி ராஜா

(3ம்விஜயபாகு, 3ம்விக்கிரமபாகு, 2ம்பராக்கிரமபாகு, 4ம்பராக்கிரமபாகு, 4ம்விஜயபாகு, 3ம்பராக்கிரமபாகு)

(4புள்ளிகள்)

iii) தென்மேற்கு நோக்கிய இராசதானிகளின் புலப் பெயர்ச்சிக்கான காரணங்கள் இரண்டைக் கூறி விளக்குக.

(5புள்ளிகள்)

iv) தென்மேற்கு இடப்பெயர்வு இராசதானி காலத்தில் அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை தலா ஒன்று வீதம் விளக்குக.

(6புள்ளிகள்)

**05) □இலங்கை வரலாற்றில் ஐரோப்பியரின் ஆட்சிக் காலமானது இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார துறைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.”**

i) இலங்கையில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கு துணைபுரிந்த போர்த்துக்கேய மிஷனறிக் குழுக்கள் மூன்று தருக.

(3புள்ளிகள்)

ii) கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் நான்கினைத் தருக.

(4புள்ளிகள்)

iii) சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் இரண்டைக் கூறி விளக்குக.

(5புள்ளிகள்)

iv) ஒல்லாந்தர் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றைக் கூறி விளக்குக. (6புள்ளிகள்)

**06)** i) பின்வரும் இலங்கை மன்னர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திய ஆங்கிலேயத் தூதுவர்களைப் பெயரிடுக.

A. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

B. இராஜாதி இராஜசிங்கன்

C. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

(3புள்ளிகள்)

ii) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் முதலாவது ஆளுனரான பிரட்ரிக் நோத்தினால் முன் வைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(4புள்ளிகள்)

iii) 1848 விவசாயக் கிளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய கோல்புறுக்கின் முன்மொழிவுகள் இரண்டைக் கூறி விளக்குக.

(5புள்ளிகள்)

iv) பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பெருந்தோட்டப் பயிர்செய்கையானது எமது சமுதாயத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் மூன்றைக் கூறி விளக்குக.

(6புள்ளிகள்)

## பகுதி III

**07)** i) மகதத்தை ஆண்ட ஹரியங்க வம்சத்து மன்னர்கள் மூவரைக் குறிப்பிடுக.

(3புள்ளிகள்)

ii) பின்வரும் A, B, C, D ஆகியவற்றுடன் தொடர்புபட்ட மன்னர்களை அடைப்புக்குறியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

A. கோசல மன்னன் பிரசேன சித்துவின் சகோதரியைத் திருமணம் செய்த மகத மன்னன்.

B. □அமித்திர காதன்□ என அழைக்கப்பட்ட மௌரிய மன்னன்.

C. புத்தர் சிலையை செதுக்கும் மரபினை ஆரம்பித்த குஷாண மன்னன்.

D. குப்தர் காலம் பொற்காலம் ஆகும். இச்சிறப்பு எம்மன்னன் காலத்தில் ஏற்பட்டது.

(அசோகன், பிந்துசாரன், கனிஸ்கன், பிம்பிசாரன், சமுத்திரகுப்தன், 2ம் சந்திரகுப்தன்)

(4புள்ளிகள்)

iii) இந்தியாவில் 16 இராச்சியங்களில் மிகவும் பலம் வாய்ந்த இராச்சியமாக மகதம் எழுச்சியடைவதற்கு செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டைக் கூறி விளக்குக.

(5புள்ளிகள்)

iv) □இந்திய வரலாற்றுக் காலத்தில் குப்தர்காலம் பொற்காலமாகும்□ இக்கூற்றினை கலாசாரத்துறையின் மூன்று விடயங்கள் ஊடாக விளக்குக.

(6புள்ளிகள்)

**08) □இங்கிலாந்தில் காணப்பட்ட அரசியல் நிலையும், கல்வித்துறையும் 17ம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி ஒன்று ஏற்பட காரணமானது□**

i) இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட மூன்று முக்கிய துறைகளையும் குறிப்பிடுக.

(3புள்ளிகள்)

ii) பின்வரும் A, B, C, D கூறப்பட்டுள்ள கண்டுப்பிடிப்புக்களுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A - நீராவி இயந்திரம்

B - பாதுகாப்பான விளக்கு

C - மோட்டார் வண்டி

D - தையல் இயந்திரம்

(ஹம்பிரிடேவி, எலியன்ஸ் கோர்வே, ரெம்ளர், ஜேம்ஸ்வாட், ஆபிரகாம் டார்பி, பெசமர்)

(4புள்ளிகள்)

iii) முதன்முதலில் கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய பொருளாதார ரீதியிலான காரணிகள் இரண்டினைக் கூறி விளக்குக.

(5புள்ளிகள்)

iv) கைத்தொழில் புரட்சியினால் உலகில் ஏற்படுத்தப்பட்ட சாதக, பாதக விளைவுகள் மூன்றைக் கூறி விளக்குக.

(6புள்ளிகள்)

**09)** i) பின்வரும் A, B, C என்னும் விடயங்களுடன் தொடர்புபட்டவர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. 1853 டோக்கியோ குடாவிற்குள் கடற்படையுடன் நுழைதல்.

B. 1858ல் ஜப்பானுடன் வியாபாரத் தொடர்பை ஏற்படுத்துதல்.

C. 1947ல் ஜப்பானுக்கென அரசியல் யாப்பை உருவாக்குதல்.

(யோன்லோ, மக்ஆதர், மார்ஷல், கொமாண்டர்பியரி, ஒடநொபுனகா, கரீஸ்டவுண்சன்)

(3புள்ளிகள்)

ii) டோகுகாவா ஷோகுன்கள் காலத்து முக்கிய அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(4புள்ளிகள்)

iii) கோமிங்டாங் கட்சி சீனாவில் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(5புள்ளிகள்)

iv) சீனப்புரட்சியில் மா-ஓ-சேதுங் ஆற்றிய பணிகளை மூன்று விடயங்களின் ஊடாக விளக்குக.

(6புள்ளிகள்)

**10) 20ம் நூற்றாண்டில் உலக மகாயுத்தங்களும் அவற்றுக்குப் பின்னரான சமாதான முயற்சிகளும் முக்கியம் வாய்ந்த வரலாற்று நிகழ்வுகளாகக் கருதப்படுகின்றன.**

i) 1ம் உலகப்போர் காலத்தில் மூன்று பேரரசுகளின் சங்கம் என்ற அமைப்பில் காணப்பட்ட மூன்று நாடுகளும் எவை?

(3புள்ளிகள்)

ii) கீழே A, B, C, D ஆகிய விடயங்களுடன் தொடர்புள்ளவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து உமது விடைத்தாளில் எழுதுக.

A. சர்வதேச சங்கம் அமைத்தமை.

B. □மெயின் காம்□ என்ற நூலை எழுதியது.

C. பிரித்தானியாவில் பிரான்சுக்கென அரசாங்கம் அமைத்தமை.

D. லாத்தரன் உடன்படிக்கையை மேற்கொண்டவர்.

(அடொல்ப் கிட்லர், மார்சல் டிற்ரோ, ஜெனரல் டிக்கோலின், வூட்ரோவின்சன், பெனிற்ரோ முசோலினி, வின்சன் சேர்ச்சில்)

(4புள்ளிகள்)

iii) உலகில் முதலாளித்துவக் கொள்கைகளைப் பரப்புவதற்காக அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

(5புள்ளிகள்)

iv) இன்று வரை சமாதானத்தை பாதுகாத்து வரும் ஐக்கிய நாடுகள் சபை தனது செயற்பாட்டின் போது எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளை 3 விடயங்கள் ஊடாக விளக்குக.

(6புள்ளிகள்)